**DEPOSITION OF WITNESS**
**( Chapter XX III Code of Civil Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**CHERANMAHADEVI**
**CASE NO : O.S.No. 38/2022**
**Deposition of witness for plaintiff P.W.1**

| | |
|---|---|
| Name | : திரு. சுந்தர ராமலிங்கம் |
| Fathers Name | : மகாலிங்கபூபதி. |
| Village | : [illegible] |
| Taluk | : do |
| Age | : 47/2025 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 16th day of September 2025.

**முதல் விசாரணை தொடர்ச்சி-**

சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு முதலாவது சாட்சியாவேன். எனக்கு இந்த வழக்கு விவரங்கள் நன்றாக தெரியும். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

2. என்னுடைய அறிவுறுத்தலின் பேரில் தான் மேற்படி நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. இவ்வழக்கில் வாதி தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | 19.11.2021 தேதியில் அருணகிரி என்பவர் வாதி பெயருக்கு கிரய பத்திரத்தை எழுதிக் கொடுத்ததை காட்டும் ஆவணத்தின் அசல் (பதிவு செய்யாதது) | வா.சா.ஆ.1 |
| 2. | 10.01.2022 தேதியில் அருணகிரி என்பவரின் இறப்பு சான்றிதழ் கணினி வழி நகல். | வா.சா.ஆ.2 |
| 3. | 28.09.2017 தேதியில் அருணகிரி என்பவர் வேறு சொத்தினை பொறுத்து பிரதிவாதிக்கு எழுதி வைத்த உயிலில் SRO நகல். | வா.சா.ஆ.3 |

16/9/25

M. Sundara Ramalingam.

| | | |
|---|---|---|
| 4. | 11.04.2022 தேதியில் வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் இரசீதுடன். | வா.சா.ஆ.4 |

பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

(பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சியின் கையொப்பம்

M. Sivalingam

சாட்சி என் முன்பாக விசாரிக்கப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

16.6.25

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், சேரன்மகாதேவி

## பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை

ஆரம்பித்த நேரம் : 12.41 p.m

முடிவடைந்த நேரம் : 12.50 p.m

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

1. நான் தற்போது தூத்துகுடியில் குடியிருந்து வருகிறேன். நான் நிதி நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். எனக்கு கிரைய ஆவணம் எழுதி தரவிருந்த அருணகிளி என்பவர் மயங்கி விழுந்ததினால், பத்திரம் பதிவு செய்ய முடியவில்லை. 1 மாதம் கழித்து அருணகிளி என்பவரை பத்திரம் பதிவு செய்ய அழைக்க சென்றபோது அவர் இறந்து விட்டார். அருணகிளியின் வாரிசுகளை பத்திரம் பதிய அழைத்த போது அவர்களும் வருவதாக சொல்லி இழுத்தடித்தால் இவ்வழக்கை தாக்கல் செய்தேன்.

2. இவ்வழக்கில் உள்ள மணிகண்டன் பூப்பாலன் என்பவர் அருணகிளியின் வளர்ப்பு மகன் ஆவார். எனது தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக இவ்வழக்கில் சார் பதிவாளரை ஒரு தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. சார் பதிவாளர் அரசு அதிகாரி என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே ஆவணங்களை பதிவு செய்வார்கள் என்றால் சரியல்ல. சார் பதிவாளரை இவ்வழக்கில் தேவையில்லாமல் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

M. [signature]

சாட்சி என் முன்பாக விசாரிக்கப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர், சேரன்மகாதேவி